**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

2026-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 -ம் நாள் திங்கட்கிழமை

**O.S. No.46 /2025**

வாதி தரப்பு சாட்சியாகிய PW.1ன் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 44-வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A., LLB., (HONS)., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், குடவாசல் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராதாகிருஷ்ணன் | தாலுக்கா | : | குடவாசல் |
| த/க/பெ. | : | சிவஞானம் | கிராமம் | : | அபிவிருத்தீஸ்வரம் |
| | | | தொழில் | : | இராணுவம் (ஓய்வு) |
| | | | வயது | : | 79 |

**1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் பிரதிவாதியின் கணவர் எனதுஉடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். வழக்கு சொத்து எனது கூட்டு குடும்ப சொத்தோ அல்லது பூர்வீக சொத்தோ இல்லை என்றால் சரிதான். தாவாசொத்து 1ம் பிரதிவாதியின் கணவரின் பெயரில் கிரயம்பெறப்பட்ட சொத்து என்றால் சரிதான். இன்று வரை தாவா சொத்தில் 1ம் பிரதிவாதி தான் வசித்து வருகிறார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் அனுபவம் 1ம் பிரதிவாதியிடம்தான் உள்ளது என்றால் சரியல்ல. 1ம்பிரதிவாதி கணவரின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் பெறப்பட்டதா என்றால் இறப்பு சான்றிதழ் மட்டும் பெறப்பட்டது. 1ம் பிரதிவாதி அவரது கணவரின் வாரிசு சான்றிதழை பெறுவதற்கு இரண்டாம் பிரதிவாதி அலுவலகத்தில் மனு செய்வதை நான் தடுத்து நிறுத்தினேனா என்றால் இல்லை. ஆட்சேபணை தெரிவித்து நீதிமன்றத்தில் மனு செய்து உள்ளேன். 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தினை செட்டில்மெண்ட ஆவணம் எழுத முற்பட்ட போது நான் தடுத்து நிறுத்தினேனா என்றால் நான் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பி ஆட்சேபனை தெரிவித்தேன். சார் பதிவாளர் அலுவலத்திற்கும் வட்டாட்சியர் அலுவலகத்திற்கும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டதா என்றால் கிராம நிர்வாக அலுவலத்திற்கும் வட்டாட்சியர் அலுவலத்திற்கு மட்டும் அனுப்பப்பட்டது ஞாபகம் உள்ளது. 1ம் பிரதிவாதி வாரிசு சான்றிதழ் வேண்டி வட்டாட்சியர் அலுவலகத்திற்கும் செட்டில்மெண்ட் ஆவணம் எழுத சார்பதிவாளர் அலுவலகத்திற்கும் சென்றாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. (சாட்சி தனக்கு தெரியும் என்றும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றும் மாற்றி தற்போது சொல்கிறார்.) மேற்படி வழக்கறிஞர் அறிவிப்புகளை நீதிமன்றத்தில் தாக்கல்

செய்துள்ளளேனா என்றால் தற்போது எனக்கு நினைவில்லை. 1993ம் ஆண்டு 1ம் பிரதிவாதி கணவர் ராமசந்திரனுக்கு தாவா சொத்தின் பேரில் ரூ. 10,000/- கடனாக கொடுத்து பெந்தக பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தற்போது பெந்தக பத்திரம் காலாவதியானதால் உயில் பத்திரம் ஒன்றை நானே தயார் செய்து கொண்டேன்என்றால் சரியல்ல. மேற்படி உயில் எப்போது எழுதப்பட்டது என்றால் எனது சகோதரர் ராமசந்திரன் இறப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு எழுதப்பட்டது. ஒரு மாதத்திற்கு மேல் இருக்குமா அல்லது ஒரு மாதத்திற்குள் இருக்குமா என்றால் அது நினைவில்லை. 1ம் பிரதிவாதிக்கும் ராமசந்திரனுக்கும் வாரிசுகள் எதுவும் இல்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 ஆவணத்தில் இரண்டாவது பக்கத்தில் பெந்தக கடன் தன்னால் திருப்பி தர முடியவில்லை என்றும் ராமசந்திரன் எனது பராமரிப்பு பாதுகாப்பில் இருந்து வருகிறார் வாசகம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.3 பதிவு செய்யப்பட்வில்லை என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.3 செல்லத்தக்கது என்று நீதிமன்ற உத்தரவு எதுவும் பெறப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி தெரியாது. வா.சா.ஆ.3 ஆவணத்தில் சாட்சிகளாக கையொப்பம் செய்தவர்கள் எங்களுக்கு தொடர்பில்லாத நபர்கள் என்றால் சரிதான். மேற்படி சாட்சிகளுக்கு நான் பெந்தக கடன் கொடுத்ததும் ராமசந்திரனை பராமரிப்பதும் தெரியாது என்றால் தெரியும். வா.சா.ஆ.3 சட்டப்படி செல்லதக்கது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு வழக்குமூலம் இல்லை என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டுமென்றாலும் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.20 11:23:04 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.